IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AMBASAMUDRAM.

Case No. OS.No.191/2019

Deposition of witness for DW 2

Name : திருமதி. சகுந்தலா

Husband / Father's Name:

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 22.07.2026

முதல் விசாரணை

நான் வழக்கின் 4–ஆம் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைதான். ராஜம்மாள் பெயரில் உள்ள கதவு எண்.42–க்குரிய பட்டா எண்.1528(அசல்) **பி.வா.சா.ஆ.1** ஆகும். ராஜம்மாள் பெயரில் உள்ள சொத்து வரி ரசீது 2003–2004 ஆண்டிற்குரியது (அசல்) **பி.வா.சா.ஆ.2** ஆகும். ராஜம்மாள் பெயரில் உள்ள குடிநீர் கட்டண ரசீது (அசல்) **பி.வா.சா.ஆ.3** ஆகும். 06.02.2004 தேதியிட்ட 3–ஆம் பிரதிவாதி, 1–ஆம் பிரதிவாதிக்கு பிராது தபசில் சொத்தில் தனக்குரிய 1/2 பங்கை பொறுத்து எழுதிக் கொடுத்த பாக விடுதலை ஆவணம் (அசல்) **பி.வா.சா.ஆ.4** ஆகும். ராஜம்மாள் பெயரில் உள்ள சொத்து வரி ரசீது 2005–2006 ஆண்டிற்குரியது (அசல்) **பி.வா.சா.ஆ.5** ஆகும். 24.04.2006 தேதியிட்ட பிராது தபசில் சொத்துக்களை கிரைய ஆவண எண்.350/2006–இன் படி 4–ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் (சான்றிட்ட நகல்) **பி.வா.சா.ஆ.6** ஆகும். 4–ஆம் பிரதிவாதி

பெயரில் உள்ள சொத்து வரி ரசீது (அசல் எண்ணம் 13) **பி.வா.சா.ஆ.7** ஆகும். 4–ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீது (அசல் எண்ணம் 12) **பி.வா.சா.ஆ.8** ஆகும். 4–ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள குடிநீர் கட்டண ரசீது (அசல் எண்ணம் 3) **பி.வா.சா.ஆ.9** ஆகும். பிராது தள்ளுபடியாக பிரார்த்திக்கிறேன்.

(பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.9 வரையான ஆவணங்கள் வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

/true copy/

Sd/– A.Maruthupandi,
Sub Judge, Ambasamudram.

Uploaded on : 22.07.2026.